1982 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அந்த வகையிலே ஒரு திட்டம் அரசிலே மேற்கொள்ளப்பட பரிசீலிக்கப் பட்டது, பருத்தி வாரியம் என்ற வகையிலே நாம் ஒன்றை அமைக்க வேண்டுமானால் பெரும் தொகை தேவைப்படுகிறது; வங்கிகளின் துணை தேவைப்படுகிறது. அவ்வளவு பெருந் தொகை ஒதுக்கத்தக்க நிலையில் மாநில அரசின் நிதி நிலைமை இல்லை. ஆகவே, பருத்தி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்று இதை அமைக்கலாம் என்ற அந்தத் திட்டத்தைக் கூட்டுறவுத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்கும் பொழுது பருத்தி சாகுபடித் திட்ட மாவட்டம் என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களுக்கு அந்தச் சலுகைகள் கொடுக்கப்படு கின்றன? எந்த வகையில் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தீவிரப் பருத்தி மாவட்டத் திட்டம் என்பது கோவை, பெரியார், நெல்லை, முகவை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசிலிருந்து 50 விழுக்காடு பெற்று நிறைவேற்றப் படுகிறது.

பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப்பிடாரம் வழியாகச் செல்லும் சாலையை சீர்செய்யும் திட்டம்.

*வினா எண் 249—திரு. க. பாரமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-எட்டயாபுரம் ரோட்டில் குறுக்குசாலை என்னுமிடத்திலிருந்து பிரிந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப் பிடாரம் வழியாகச் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அண்டு (ஆ) பழுதடைந்த சாலையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள செங்கல் தயாரிக்கும் தொழிற் சாலைகள்.

*வினா எண் 250—திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வில்லிவாக்கம் தொகுதியில்—நொளம்பூர், மதுரவாயல், அடையாளம்பட்டு, மேற்கு அண்ணா நகர், அயனம்பாக்கம், பகுதிகளில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அரசால்

குறிப்பிடப்பட்ட வரைமுறைகளுக்கு புறம்பாக பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்படும் விதத்தில் நடத்தப்படுவது பற்றி அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பகுதியில் வரைமுறைகளுக்கு புறம்பாக குடியிருப்பு பகுதிகளில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு உள்ளாட்சி நிறுவனங்களால் உரிமம் தரப்படவில்லை என்ற தகவல் அரசுக்கு தரப்பட்டுள்ளது.

திரு. ஜே. சி.டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதிகளில மொத்தம் எத்தனை செங்கல் தொழிற்சாலைகளுக்கு உரிமம் தரப்பட்டிருக்கின்றன? இன்னும் எத்தனை பேர்கள் இதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அடையாளம்பட்டு ஊராட்சியில் 9 செங்கல் தொழிற்சாலைகளும், நொளம்பூர் ஊராட்சியில் 20 செங்கல் தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் புதிதாகத் தொழிற்சாலைகள் வேண்டுமென்று கேட்டு விண்ணப்பங்கள் வந்ததாக் குறிப்புகள் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது மேலும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே 15 அடி, 10 அடி வேண்டுமென்று அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களை நம்முடைய உத்தரவில்லாமல் ஆக்கிரமித்துக்கொண்டு தகவல் கொடுக்காமல் எடுத்திருப்பதை அரசு அறியுமா? மேலும் அந்தப் பகுதிகளில் பள்ளமாக எடுத்துவிடுவதால் நெல் பயிரிடும் விவசாயிகள் அவதிப்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புகள் அரசிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்.

ஈரோட்டில் திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டும் திட்டம்.

***வினா எண். 251— திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரி கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு நகராட்சி ஈரோடு நகரில் திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரி உள்ளதா?